# அறிவொளி


மலர் 1 இதழ் 3 ஆவணி மாதம் 1985 விலை ரூ.பா 1-00

## சிறையில் படுகொலை உயிருடன் இருப்பவர் உண்ணாவிரதம்

தமிழ் கைதிகள் சிறையில் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதால் உயிருடன் இருப்பவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

தங்காலைச் சிறையில் இச் சம்பவமாம்.

பயங்கரவாத தடைச்சட்ட கால எல்லையான 18 மாதங்களையும் மீறித் தங்காலைசிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை உடன் விடுதலை செய் என்றும், நமது கைதிகள் என்ன அனாதைகளா? அவர்களுக்கு நல்ல உணவு, உடை என்பன வழங்கப்படுவதில்லை எனவும் கூறுகிற சுவரொட்டிகள் யாழ் நகரமெங்கும் காணப்படுகின்றன. முறையே 'தீப்பொறியும்' ஈ, பி. ஆர். எல். எவ். பெயர்களில் இவை காணப்படுகின்றன.




புரு மார்க் கற்பூரம்;

வெளிநாட்டு தொழில் நுட்ப முறைப்படி எவ்வித கலப்புமின்றி சுத்திகரிக்கப்பட்ட விளைவு சூடத்தில் தயாரிக்கப்படுகிறது.

உருகாது கருகாது நெடுநேரம் எரியக் கூடியது. (கற்பூரத்தைக் கடதாசியுடன் கொழுத்தாதீர்கள்)

ஏக விநியோகஸ்தர்கள்:

ஜெயலட்சுமி கொம்பனி,

244, கே, கே. எஸ். விதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23894

● பிரச்சனையைத் தீர்க்க விரும்பாத அரசியல்வாதிகள் யார்?

நாட்டிலே பழிக்குப்பழி, இரத்தத்துக்கு இரத்தம்! ஆனால்....

# பூட்டான் கதவுகள் பூட்டப்படா புதுடில்லி பொது புது முடிவெடுக்கும்?

இலங்கைப் பிரச்சனைக்குத் தீர்வை விரும்பாத அரசியல்வாதிகள் யார்? நாட்டிலே பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம் நடைமுறையாகி வருகிறது. ஆனால் பூட்டானின் திறந்த கதவுகள் பூட்டப்படாமலே புதுடில்லி 'பொது புது' முடிவை எடுக்கலாம். இதுவே கடைசித் தடவை என்ற பண்டாரியின் பயணம் பலன் தரவே செய்யும். பேச்சுக்குப் போனவர்கள் வெறுங்கையுடன் திரும்ப மாட்டார்கள். மேலாகச் சொல்வதானால்இந்தியாவைப் பகைத்து ஆயுதப் போராட்டம் இல்லை. இலங்கையும் இயங்கமுடியாத நிலை.

கடைசிப் பயணம் என்றார் திரு. பண்டாரி. சமூக ஸ்தாபனங்கள், நல்லெண்ணம் கொண்டவர்கள் இனப் பிரச்சனை தீர்க்கப்படவேண்டும் என்பதை விரும்புகிறார்கள்; வற்புறுத்துகிறார்கள்.

சதுரங்கம் ஆடும் அரசியல்வாதிகள் விரும்புகிறார்கள் இல்லை. அரசியல்வாதிகளிலும் சிலர் இதனை முற்றாகவே விரும்பவில்லை என்று பகிரங்கப் படுத்தப்பட்டுவிட்டது.

திரு. பண்டாரியின் கூற்றில் இலங்கை அரசியல்வாதிகளின் சுயரூபம் தெரிகிறது. யார் விரும்புகிறவர்கள்,எவர் குழப்புகிறவர்கள் என்பதும் வெளி வருகிறது.

அது எந்தக் கட்சி என்று ஆராயவேண்டியதில்லை. எக் கட்சி மீதும் 'சீல்' குத்தவேண்டியதுமில்லை!

பிற்போக்குத்தனமான சர்வதேச தொடர்புடைய சகலரும் இது விசயத்தில் ஒன்றுபட்டு செயலாற்றுகின்றனர். இவர்கள் தொகை மிக மிகக் குறைவு.

ஆனால் ஆயுதத்தைப் பாவிப்பவர்களையும். காடையர்களையும் பாவித்து 'சிங்கள மக்கள் விரும்பவில்லை' என்று காட்ட முனைகின்றனர். இவர்களின் சர்வதேச தொடர்பும், பொருட் பலமும் இந்தியா முன் தலைகுனியவே போகிறது.

'பழிக்குப் பழி', 'இரத்தத்துக்கு இரத்தம்' என்பதெல்லாம் வீணான இழப்புக்களாக நாள் போகப்போகப் புரியப் போகின்றன.

''எனது கடைசிப் பயணம்'' என்ற வார்த்தையில் பல அர்த்தங்கள் உண்டு.

'நீ சம்மதி! நீ சம்மதியாவிட்டால் நான் பார்த்துக் கொள்வேன்' என்ற நிலைப்பாடுகள் அடங்கியுள்ளன.

இமயம் முதல் குமரிவரை பரந்துவிரிந்த இந்திய உபகண்டத்தின் பட வரைவுகள் எங்ஙனம் எல்லை காட்டுகின்றன? புவியியல் வரலாறு சான்றுகள் கொண்டு இலங்கை குமரியில் அடங்கும் என்கிறார்கள்.

பூட்டான் இமயத்தின் அடிவாரத்தில் இருக்கிறது.

ஆங்கில அரசு சென்னை மாகாண நிர்வாகத்தின் கீழ் இலங்கையை ஆண்ட கதை உண்மையான சரித்திரம்,

பஞ்சாப் பிரச்சனைசரி. அசாமும், இலங்கையும் மட்டுமே உள்ளன, அவைகளையும் தீர்த்துவைப்பேன் என்ற உறுதியான ராஜீவின் பேச்சை சற்று ஆழமாக சிந்திக்கவேண்டும்.

எனவே சமரசத்துக்காகத் திறக்கப்பட்டிருக்கும் பூட்டான் கதவுகள் பூட்டப்படாமலே பிரச்சனை தீர்த்து வைக்கப்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒத்திவைப்புக்கு இடம் உண்டெனலாம்.

தீர்க்கப்படும் 'தீர்வு' எவ்வளவு 'கனம்'வாய்ந்தது என்பது வேறு விடயம்.

(வெளிவந்த 'அறிவொளி' இதழ்களை நினைவில் கொள்க.)

## ஆயுதப் போராட்டம் தோற்றது ஏன்?

### சுபாஸ் உண்மையான போராளி

தனது இன விடுதலைக்காக தாய் நாட்டு மண்ணை மீட்பதற்காக பசி பட்டினி சாவிலிருந்து மீள்வதற்காக சரியான பாதை ஆயுதப்போராட்டமே என விடுதலை வேண்டி நிற்கும் மக்கள் அதனைக் கைக்கொள்ளுகின்றனர். இன்றும் நடைபெறுகிறது.

ஆயுதப் போராட்டங்கள் வெற்றியைத் தந்தன.

எல்லா ஆயுதப் போராட்டங்களும் வெற்றி பெற்றுத் தரவில்லை.

வெற்றி தந்த ஆயுதப் போராட்டங்கள் சில 'எதற்காக ஆயுதம்' எடுக்கப்பட்டதோ அந்தக் குறிக்கோளை இறுதியில் நிறைவேற்றவில்லை.

திசை திரும்பின. திருப்பப்பட்டன. மக்கள் கசப்படைந்தனர்.

சில ஆயுதப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்த காலகட்டத்திலேயே இடை நடுவே தோற்றுப் போயின.

உண்மையான விடுதலை வேண்டி ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் சரியானகொள்கையும்,நோக்கும் உள்ளவர்களாய் இல்லாததாலும்,சேர்ந்த இடம்,உதவிக்கு வந்தவர்கள் போக்கு வேறு விதமாக அமைந்ததாலும் ஆயுதப் போராட்டங்கள் தோல்வியில் முடிந்துள்ளன.

வங்கச் சிங்கம் சுபாஸ் சந்திரபோஸ் நடாத்திய ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிந்தது;

உண்மையான போராளி இந்திய மாதாவின் விலங்கு உடைத்துச் சுதந்திரம்

(மறுபக்கம் பார்க்க)

## பெண்கள் விடுதலை எப்போது வரும்?

### மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்

பெண்களுக்கு சமஉரிமை விடுதலை வேண்டும் என்கிறோம். ஒரு ஆண் செய்யக் கூடிய அனைத்தையும் (இயற்கைரீதியான உடலியல் சார்ந்தவை தவிர) ஒரு பெண் செய்வதற்கு ஆண் அனுமதிப்பது பெண் உரிமையின் சாரம் எனலாம்.

சம உரிமையும், விடுதலையும் மாறுபட்டவை. சமஉரிமையென்பது மற்றவர் அனுபவிப்பதளவு தானும் அனுபவிக்க விரும்புவது. விடுதலை என்பது விரும்பியவாறு முன்னேற்றமான செய்கைகளை செய்ய விளைவது.

மனித சம உரிமை என்பது என்ன?

ஒரு மனிதன் அனுபவிப்பவைகளை இன்னொரு மனிதன் அனுபவிக்க உரிமை இருப்பது தான்.

ஆனால் பொதுவாக மனிதருள் ஆண், பெண் வித்தியாசமின்றி சமஉரிமை அற்ற நிலை ஏற்ற, தாழ்வுகள் வாயிலாக இருக்கவே செய்கின்றன:

**ச. பவளமணி**

இந்நிலையில் பெண்விடுதலை என்று பேசுவது, எழுதுவது எவ்வளவுக்குப் பலன் தரும்?

நமது நாட்டிலும், நம் நாட்டைப் போன்ற அமைப்புக் கொண்ட நாடுகளிலும் பெண் விடுதலை பற்றிப் பேசுவது ஒரு பொழுது போக்கு அல்லது போலி.

கலை இலக்கியங்கள், கலாச்சாரங்கள், சீதனம், உழைப்பு, அன்றாட வாழ்வில் ஏற்படும் சுகதுக்க இன்பதுன்

(மறுபக்கம் பார்க்க)

ஆசிரியர் கருத்து

## "நீள நினைந்தடியேன்....'

# விசாரணைகள்

அன்று......

வேலிச்சண்டை, கோழிச்சண்டை, குடிவெறியில் ஏசிது......கோஷ்டிச்சண்டை, சாதிச் சண்டை, வெட்டுக்கொத்து ... பொம்புளை தூக்கினது... .. எதுவானாலும் பொலிசுக்குச் சென்று முறைப்பாடு செய்வர்.

சண்டை சச்சரவுகளின் தரத்துக்கேற்ப பொலிசார் சைக்கிளில் அல்லது ஜீப்பில் வருவர்.

சிறியதாயின் சைக்கிளில் வந்த பொலிசார் முறைப்பாடு செய்தவரையும், முறைப்பாட்டுக் குர்யவரையும் சந்தித்து அவரவர் வாக்குமூலங்களை எழுதிக்கொண்டு திகதி குறிப்பிட்டுத் தமது பொலிஸ் நம்பர்களையும் கொடுத்து பொலிஸ் கந்தோருக்கு வரச் சொல்வார்.

இன்ன பொலிஸ் வந்தது. இன்ன பொலிஸ் ஸ்டேசனுக்குப் போகவேணும் என்பதனை மக்கள் தெரிந்து வைத்திருந்தனர்.

போர் பெரியதாயின்...... ஜீப்பில் வந்தவர்கள் வெட்டினவனையும். உதவிக்குப் போனவர்களையும் வேலி பாய்ந்து ஓடிப்பிடித்து 'நல்ல சாப்பாடு' போட்டு ஏற்றிச் செல்வர். பொலிசாரினுல் பிடிபட்டவரின் உறவினர் 'அவரை, இவரை'ப் பிடித்து ஏதோ ஒரு வகையில் காரியம் பார்ப்பர். அடைபட்டு இருப்பவருக்கு இடியப்பம், தேநீர் வாங்கிக் கொடுப்பர்,

பொலிஸ் அதிகாரியின் விசாரணை பொலிஸ் ஸ்டேசனில் நடக்கும்.

சண்டை பிடித்த இரு பகுதியும் தமது நியாயங்களை எடுத்துச் சொல்வர். முடிவில் இணக்கத்துக்கு வருவர்.

பொலிஸ் அதிகாரி இறுதியில் இரு பகுதியினரையும்பார்த்து...... 'டேய்... நீங்கள் ஓம்ரே ஆட்கள்... இனிமேல் சண்டை பிடிச்சா என்ன செய்வம் தெரியுமா?... கையெழுத்தைப் போட்டுட்டு ஓடுங்கோடா என்பார்.

அது மச்சான் அவனுலை வந்தது .. இது இதாலைவந்தது... என்று சண்டை பிடித்தவர் ஒருவரை ஒருவர் சமாதானப்படுத்தி தேநீரும் குடித்துச் சந்தோசமாகப் போவர்.

உள் மனதில் கோபமாகப் போகிற 'கேசு'களும் உண்டு.

வெட்டுக் கொத்து, கொலையானுல் நீதிமன்றம் சென்று வாதாடியும், செலவழித்தும் வெளிவரச் சந்தர்ப்பம் உண்டு. அல்லது சிறையில் இருந்தால் போய்ப் பார்த்துவரலாம்.

'அன்றை' இந்த நிலைமை 'இன்று' நல்லதாகத் தெரியலாம். ஆனுல் இத்தகைய நடவடிக்கைகளையே மக்கள் வெறுத்தனர் அன்று.

இன்று.........

# ஆலயத்துக்கு ஆடுகளை வெட்டுகிருர்கள் அரசியலுக்கு ஆட்களை வெட்டுகிருர்கள்

## வெட்டுக் கொத்து வேள்வி ஏன்? வெந்த புண்ணில் வேல் பாய்ச்சலாமா?

வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் துப்பாக்கிச் சூட்டுக்கும், வெட்டுக் கொத்துக்கும் பலர் இறந்துள்ளனர். ஆபத்தான நிலையிலிருந்தவர் சிலர் ஆசுப்பத்திரி வந்தடையுமுன் இறந்தனர்.

கண்ணிவெடியைத்தொடர்ந்து இச் சம்பவங்கள் நடந்து கொண்டனவாம். தொடர்ந்தும் நடக்கிறது.

இறந்தவர்கள் இளைஞர் என்ருல் வேறு போக்கு. வயோதிபர், பெண்கள், பிஞ்சுப் பாலகர்கள் இறந்தார்கள் என்பதைத்தான் சகிக்கவே முடியவில்லை.

''நெஞ்சுக்கு நேராய் வரட்டும் நெஞ்சில் துணிவிருந்தால்'' என்ற பாடல் ஒரு வீரன் இன்னெருு வீரனை துணிவுடன் அழைப்பதைக் காட்டுகிறது.

இதற்கு மாருனவர்கள் தமக்குள் போரிட்டுக்கொள்ளப் பயந்து பொதுமக்களை அழிக்கிருர்கள் போலும்.

காடுகளில் தஞ்சம், ஒரே வீட்டில் பலர் கொலை என்ற செய்திகள் பெருகுகின்றன.

அடித்தவனை அடிப்பதே பழிக்குப்பழி. அல்லாமல் செய்வதற்குப்பெயர் 'வழிக்கு வழி' யாகும்.

ஆம். வழிக்கு வழி கொலை மட்டுமல்ல நடக்கிறது.

மக்கள் சிந்தனைகளை ஒன்று படவிடாமல் வவுனியா, திருகோணமலை சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஆலயத்தில் ஆடுகளை வெட்டுகிருர்கள் — நேர்த்திக்கடன்.

அரசியலுக்காக ஆட்களை வெட்டுகிருர்கள் ஏன்?— இது தின்றகடன் தீர்க்கவோ?

துர்நாற்றம் வீசுவது வவுனியாவில் மட்டுமல்ல.

இலங்கை முழுவதுமே!

## 'அவர்கள் குற்றவாளிகளல்ல'

தொடர்கதை

சண்முகலிங்கம்

'தம்பி! விளக்கைக் கொண்டு வா. சுருட்டுப் பத்திப் போட்டுத் தாறன் என்பார். விளக்கைக் கொடுத்தால் சிறிது நேரம் படிக்காமல் இருக்கலாம் என்பதில் மகிழ்ச்சி. சிலவேளை 'தம்பி கடைக்குப் போயிட்டு வாறியாடா?' என்பார்கள், பகல் நேரமாயின் போவேன். இனிப்பு வாங்கவும் சிலர் காசு தருவார்கள். இரவு நேரமாயின் பேய்க்குப் பயம். எனவே சிணுங்குவேன். என் தகப்பனுரும் இரவில் குடிவெறியில் இருப்பார். என் சிணுக்கத்தைக் கண்டதும் என்னை அதட்டுவார். பேய்க்குப் பயமானாலும் அடிக்குப் பயந்து கடைக்குப்போவேன்.

திண்ணையில் புத்தகம் விரித்துக் கிடக்கத்தக்கதாக எப்படித்தான் நித்திரையாகிவிடுகிறேனே தெரியாது. அம்மா குண்டியில் அடித்து சாப்பிட்டுட்டுப் படடா என்று சத்தம் போடுவாள்,

இரவுச் சமையல்தான் எங்கள் வீட்டில் தினசரி நடப்பது வழக்கம், பகலில் அப்படியும் இப்படியும் தான் சாப்பாடு.

(தொடரும்)

## ஆயுதப் போராட்,..

(முன்பக்கத் தொடர்ச்சி)

காணப் புறப்பட்டான் சுயாஸ்.

ஆங்கிலேயரின் அடக்குமுறை, கொலை ஆட்சிக்கெதிராக அஹிம்சைப் போர் உதவாது என்று கூறி அயல் நாடு சென்று ஆயிரமாயிரம் இளைஞர், யுவதிகளை அணிதிரட்டி ஆயுதம் ஏந்திப் போராடினுன் சுபாஸ்.

ரஸ்சியாவின் உதவியை முதலில் விரும்பினுன். கேட்டான். ஆனுல்...

அவசரத்தில் ஜெர்மன் முக்கூட்டு நாடுகளின் அழைப்பை ஏற்ருன்.

எனது தாய்நாட்டை மீட்க உதவுங்கள். ஆனுல் என் நாட்டில் கால் ஊன்றி நிற்க உங்களை விடமாட்டேன் என உறுதியுடன் கூறினுன்.

நேதாஜி சுபாஸ் இலேசுப்பட்டவரல்ல.

முக்கூட்டுக்கு இது பிடிக்கவில்லை.

வெள்ளையருக்கெதிராகப் போராடினுன். ஆரம்ப வெற்றியும் கண்டான். சுதந்திர இந்தியாவைப் பிரகடனம் செய்தான்.

போர் தொடர்ந்தது.

இரண்டாம் உலக யுத்தம் படுபயங்கரமாக நடந்தது. உதவிகள் சுபாசுக்குக் கிடைக்கவில்லை. தோல்வி பின் வாங்கினுன்; ஆனுல் தயங்கவில்லை.

உதவிக்கு வந்தவர்களை நேச நாடுகள் அடக்கின.

சுபாசுக்கு உதவ்யாருமில்லை. விடுதலை வீரன் மர்மமானுன். மறைந்தான். சுபாஸ் உண்மையான போராளி.

## பெண்கள் விடுதலை...

(முன்பககத் தொடர்ச்சி)

பங்கள் என்பன பெண்களுக்கான உரிமையை மறுக்கவே செய்கின்றன-

தற்போதய கல்வி இதற்கு மேலும் உரமூட்டுகிறது.

தமிழரின் பாரம்பரிய இலக்கியங்கள் முடிவில் ஆணைத்தான் தெய்வமாக்குகின்றன கோவலன் பாத்திரங்களை மெச்சுகிருேம். படிதாண்டாப் பத்தினி' என கலாச்சாரம் அறிவிப்பதைப் புகழ்கிருேம். பல்கலைக்கழகத்து மேடைகளில் சீதனம் பற்றிப் பேசுகிருேம். கந்தோரில் வேலை செய்து விட்டு வந்த மனைவியிடமே சாப்பாட்டை எதிர்பார்க்கிருேம். இன்பபொழுதுபோக்குக்காகப்படம்பார்க்கப் போனுலும் பிள்ளையை அவள் தான் தூக்கி வர வேண்டும் என விரும்புகிருேம்.

இவற்றை உள் மனதார ஏற்றுக் கொண்டு விடுதலை பற்றிப் பேசவும் தயங்குவதில்லை.

தனது கணவன் சேற்றில் இறங்கி வந்தாலும் ஏற்க வேண்டும். காலைக் கும்பிட்டு முதலில் எழும்ப வேண்டும், உணவு சமைக்க வேண்டும். பெண்கள் அடக்கமாக வீட்டில் இருக்க வேண்டும் என்பன போன்ற சிந்தனைகளை ஒரு புறத்தில் 'கல்வி' மூலம் புகட்டிக் கொண்டு மறுபக்கத்தில் நின்று பெண்விடுதலை என்கிருேம். இது சாத்தியமா?

கல்வியில் மாற்றம் வேண்டும். ஆண்கள் மனதில் உறுதி வேண்டும். பேசுவது எழுதுவது மட்டும் விடுதலை தராது' செயல் வேண்டும். மாற்றம் தேடும் செயல் வேண்டும்.

# கொழும்பும் யாழ்ப்பாணத்தாரும்

கொழும்பும், யாழ்ப்பாணமும் எண் சோதிடத்தில் ஆரும் இலக்க இடங்களாகும். ஒரு சுக்கிர ஆதிக்கக்காரர் இன்னெருு சுக்கிர ஆதிக்கக் காரரைக் கவர்ந்திழுப்பது போல, இந்த இரு இடங்களும் ஒன்றையொன்று கவரும் தன்மை உடையன. இருநூறு மைல்களுக்கு அப்பால் உள்ள கொழும்பில், யாழ்ப்பாண மக்கள் ஒரு வாழ்க்கையை அமைக்க விரும்பியதன் காரணம் இதுவாகவும் இருக்கலாம், யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவர்கள், கொழும்பு வாழ்க்கையில் காதல் கொண்டு பிறந்த இடத்தையே மறந்து வாழ்ந்த காலம் இருந்தது. சிறிய கடைகள், பெரிய வியாபார ஸ்தாபனங்களை அமைத்துச் செல்வந்தராக ஆகியவர்களையும் மறக்கமுடியாது.

இலங்கையின் எந்த இடத்தையும் விட கொழுமபை இவர்கள் விரும்பினுர்கள். எல்லாவற்றிற்கும் வசதியான இடம் எனறு கூறிக்கொண்டார்கள், யாழ்ப்பாணத்தில் தங்களுககுச் சொந்தமான காணிகளை விற்று கொழும்பில் காணி வாங்கி வீடு கட்டி வாழ்ந்தவர்கள். வெள்ளவத்தையை சொர்க்கபுரி ஆக்கினுர்கள். கொழும்பில்தான் சீதண வீடு வேணடும் என்று மாப்பிள்ளைகள் கிராக்கி பண்ணிய காலம் இருந்தது. கவர்ச்சிகரமான ஆரும இலக்கத தொழில்களான பத்திரிகைத் துறை, மற்றும் கலா ரசனை பொருநதிய தொழில்களினமத்திய இடமாகக் கூடகொழும்பு இருநததென்று கூறலாம். வசதுகள் நிரம்பிய வாழ்க்கையின் உச்சக் கட்டத்துல் நாம் கொழும்புத் தமிழர், யாழ்ப்பாணம் தெரியாது என்று சொன்னவர்களும உண்டு. ஆரம்பத்தில் கலவி கற்பதற்கு வசதியான இடம் என்று கொழும்பு சென்றவர்கள், பின்பு தொழிலைத் தேடிக் கொண்டார்கள். அங்கு உறைய ஆரம்பித்தார்கள். வசதிகளை அனுபவித்தார்கள். இதுஒரு வகைக்கவர்ச்சிதான். பின் விளைவைக் கருதாத உணர்ச்சிக் காதல். ஆனுல் ''வெள்ளி திசை'' நெடுக நிலைக்கவில்லை. நிலைக்கவும் மாட்டாது.

— சோதிடர் அரிஸ் —

## லிகிதர் பதவிக்கான வெற்றிடம்

லிகிதர் பதவிக்கான வெற்றிடம் ஒன்று கோரப்படுகின்றது. தகமைகள் குறைந்த பட்சம் க. பொ. த. (சாதாரண)வகுப்புவரை படித்திருத்தல் வேண்டும். நற்சான்றிதழ் உடன் அனுப்பவேண்டிய முகவரி,

அறிவாளி,
241/2, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர்க் கதை

எங்களில் பலர்
வெளிநாடு சென்ருர்கள்
திரும்புவார்கள்
இன்னும் பலர்
மேலுலகம் சென்ருர்கள்
திரும்பாதவர்கள்
இது
கண்ணீர்க் கதை.

— அரிஸ்

## சுதந்திரம்

உண்ண உணவில்லையா?
உண்ணுமலிருக்கச் சுதந்திரம்
உடுக்க உடையில்லையா?
உடுக்காமலிருக்கச் சுதந்திரம்
இருக்க இடமில்லையா
நடைபாதையில்
நடுச்சாலையில்
சாக்கடை ஓரத்தில்
சந்து பொந்துகளில்
எங்கு வேண்டுமானுலும்
இருக்கச் சுதந்திரம்
கள்ளனுக்குச் சுதந்திரம்
கள்ளக் கடத்தலுக்குச்
சுதந்திரம்
கற்பழிக்கச் சுதந்திரம்
கலப்படம் செய்யச் சுதந்திரம்
போதாதா இந்த சுதந்திரம்
புலம்புகிறீர் ஏன் இனனும்...

— எஸ். சோமசுந்தரம்
(நன்றி: தினமணிக்கதிர்)

INDRA JEWELLERS
JEWELLERY MERCHANTS
185 A, Kasturiar Road, Jaffna
இந்திரா ஜுவல்லர்ஸ்
தங்கநகை வியாபாரம்
185 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

இப்பத்திரிகை 3/8 சென் பெனடிக் ருேட் நல்லூரைச் சேர்ந்த மனுவல் அன் சன்ஸ் அவர்களால் யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியி [ ப்பட்டது